பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 20 | சனிக்கிழமை | 04.01.2025 | அதிர்வு 155

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு!

### வவுனியாவில் சோகம்

மின்சாரம் தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாகச் சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் வவுனியா 05▶

# தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில் தமிழ் எம்.பிக்களுடன் பேச முடிவு

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7 ஆம் திகதி சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோருடன் கலந்துரையாடி அந்தச் சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்க விருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து எதிர்வரும் காலத்தில் 05▶



# தமிழரசை மலினப்படுத்துவதுதான் பொன்னம்பலத்தின் ஒரே வேலை!

### அவருடன் பேச்சு வேண்டவே வேண்டாம் என்று கொழும்புக் கிளையின் தலைவர் வலியுறுத்து

**“தமிழ் மக்களின் நன்மைகளை முன்னிலைப்படுத்தாது தன்னை முன்னிலைப்படுத்துவதும் தமிழரசுக் கட்சியைப் பலவீனப்படுத்துவதற்குமான ஒரு உபாயமாக மட்டுமே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இப்போது புதிய அரசமைப்புப் பற்றி தமிழரசுக் கட்சியைப் புறம்தள்ளி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் பேச முற்படுகின்றார். அதற்குத் தமிழரசுக் கட்சி இடமளிக்கக்கூடாது. இதனைக் கருத்திற்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கஜேந்திரகுமாருடன் இது விடயம் தொடர்பில் எதுவித பேச்சுக்களையும் முன்னெடுப்பது தமிழர் நலனுக்கோ கட்சிக்கோ உகந்ததல்ல என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.”**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் சி.இரத்தினவடிவேல்.** 05▶



# இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கடத்தி வரப்பட்டு வேலணையில் இறக்கிய விவசாயப் பொருள்கள் சிக்கின

### எஸ்.ரி.எவ். அதிரடி நடவடிக்கையின்போது 3 சந்தேகநபர்களும் கைது



**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கடத்தி வரப்பட்டு வேலணையில் இறக்கிய விவசாயப் பொருள்கள் இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேகொண்ட அதிரடி நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழகம், இராமேஸ்வரம் ஊடாகக் கடத்தி வரப்பட்ட எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட 39 மூடை விவசாயப் பொருள்களே இவ்வாறு நேற்று மாலை கைப்பற்றப்பட்டுள்ளன.

கடத்தி வரப்பட்ட மூடைகள் அனைத்தும் சென்னையில் இருந்து பொதி சேவை ஊடாக இராமநாதபுரத்துக்கு எடுத்து வந்தமைக்கான எழுத்துக்கள் மூடைகளில் காணப்படுகின்றன. 06▶




‘சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டதாம்.’

– இப்படி ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

தென்னிலங்கை அரசியல்வாதியான ‘வில்லங்கம் பிடித்த’ விமல் வீரவன்ஸ இப்போது செய்திருக்கும் ஒரு காரியத்தைப் பார்க்கும் போது இந்த பேச்சு மொழிதான் நினைவுக்கு வருகிறது.

தமது பழைய தோஸ்த்தான பஸில் ராஜபக்ஷ பெருந்தொகையான சொத்தை முறையற்ற வகையில் சேகரித்து இருக்கிறார் என தெரிவித்து, அது பற்றிய விடயங்கள் தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேரடியாக பிரசன்னமாகி, விவரங்களை சமர்ப்பித்து, வாக்குமூலம் அளித்திருக்கிறார் அவர்.

அமெரிக்காவில் வேலையே செய்யாத பஸில் ராஜபக்ஷ அங்கு சொந்தமாக வீடு வைத்திருக்கிறார் என்பதில் தொடங்கி பல விடயங்களை விமல் வீரவன்ஸ இப்போது புலனாய்வாளர்களிடம் தெரிவித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

பாம்பின் கால் பாம்பறியும். 05▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை ஒரு மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை




இதுவரையில் கால தாமதம் ஆகியுள்ள 130,000 சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் அச்சிடப்பட்டு ஒரு மாதத்திற்குள் வழங்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்துள்ளார்.

வேரஹெர மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு நேற்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இணையவழி முறையினூடாக மேற்படி நிறுவனத்தின் சேவைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்துள்ளார்.

# அதிகளவான வரிவருமானம் கடந்த ஆண்டில் ஈட்டப்பட்டது




இலங்கை வரலாற்றில் 2024 ஆம் ஆண்டிலேயே அதிக வரிவருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டில் வரி வருமானம் 25.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டில் 1.56 ரில்லியன் ரூபா வரி வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

இது 2024 ஆம் ஆண்டில் 1.95 ரில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக, 2024ஆம் ஆண்டில் வருமான வரியாக 112.1 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளதுடன் வற் வரியினூடாக 245.5 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சீன வைரஸ் பரவல் தொடர்பில் இலங்கையில் தொடர் அவதானம்

சீனாவில் பரவும் வைரஸ் பரவல் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாக இலங்கை சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து எதிர்வரும் நாள்களில் அறிவுறுத்தல் விடுக்கப்படும் என தொற்றுநோயியல் விஞ்ஞான பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 பரவல் ஏற்பட்டு 5 வருடங்களின் பின்னர் தற்போது சீனாவில் மற்றுமொரு வைரஸ் தொற்று பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



எச்.எம்.வி.பி என அறியப்படுகின்ற இந்த வைரஸ் பரவலை அடுத்து சீனாவில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# கெஹலியவின் குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்குகள் தொடர்ந்தும் முடக்கம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல வின் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்குகள், ஆயுள் காப்புறுதி திட்டங்கள் ஆகியவற்றை செயற்படுத்துவதை தடுக்கும் உத்தரவை மேலும் 3 மாதங் களுக்கு நீடித்துக் கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்ததன் பின்னர் கொழும்பு மேல்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள் ளது.

லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, கெஹெ லிய ரம்புக்வெல்லவின் மனைவி, மகள்கள் மற்றும் உற வினர்களின் 97 மில்லியன் ரூபாயுக்கும் அதிக பெறுமதி யான நிலையான வங்கி வைப்புக்கள் மற்றும் ஆயுள் காப் புறுதி திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துவதற்கு தடை விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் முன்னதாக உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதன்படி, இந்த உத்தரவு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், அதனை மேலும் நீடிக்குமாறு லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மேல்நீதி மன்றம் இந்த உத்தரவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி வரை நீடிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# திருட்டு சம்பவம் தந்தை, மகன் கைது







(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு விசுவமடு பகுதியில் திருட்டு சம்பவத்து டன் தொடர்புடைய தந்தையும் மகனும் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் புதுக்குடியிருப்பு விசுவமடு 10 ஆம் கட்டை பகுதியில் வீட்டுதளபாடங்கள், மோட்டார் சைக்கிள் என்பன களவாடப்பட்டிருந்தன. இந்த திருட்டு சம்பவம் தொடர் பாக வீட்டு உரிமையாளர்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் போடப்பட்ட முறைப்பாட்டுக்கமைய புதுக் குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை யில் இந்த திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் திருடிய பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருக்கின்றார்கள். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியி ருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தவணைப் பரீட்சை விடைத்தாள் வெளியானமை தொடர்பில் விசாரணை



வடமத்திய மாகாணத்தில் மூன்றாம் தவணை பரீட்சையின் புவியியல் வினாத்தாளுக்கான விடைத்தாள் வெளியானமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் சிறிமேவன் தர்மசேனவின் ஆலோசனையின் பேரில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வினாத்தாளை இரத்து செய்து புதிய வினாத்தாளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்கள் ஊடாக விடைத்தாளை வெளியிட்ட ஆசிரியை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.








# வித்தியானந்த கல்லூரியின் அதிபரை இடமாற்ற கோரி கவனவீர்ப்பு போராட்டம்

(பா.சதீசன்)

வித்தியானந்த கல்லூரி அதிபரினை இடமாற்றம் செய்யக் கோரி பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்களால் கவனவீரப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அதிபர் கல்லூரியின் வளர்ச்சியை சீர்குலைக்கின்றார் எனவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்றார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனவே அவரை உடனடியாக இடமாற்றம் செய்யக்கோரி பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பெற்றோர்கள் இணைந்து நேற்று பாடசாலை நுழைவாயிலில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த போராட்டமானது 14 ஆசிரியர்களுக்கு அண்மையில் அவர்களுக்கான பதிலீடு இன்றி, தனிப்பட்ட பழிவாங்கல் நோக்கில், இடமாற்றத்திற்கு சிபாரிசு செய்தமை, இவரது பொறுப்பற்ற வார்த்தை பிரயோகங்கள், தனிப்பட்ட பழிவாங்கல்கள் காரணமாக இவர் பாடசாலையை பொறுப்பேற்கும் போது இருந்த ஆசிரியர்கள் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (83 ஆசிரியர்களிலிருந்து 63 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது),

இவரால் பாடசாலையின் ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு பாடசாலையின் அகச்சூழல் சீரின்றியும், பாதுகாப்பின்றியும் உள்ளமை.,

பாடசாலை சொத்துகளை பாதுகாப்பது மற்றும் அது தொடர்பான வெளிப்படை தன்மை இல்லாது செயற்படுகிறார்.

அதிபர் மீதான நிதிமோசடி விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை, குறித்த விடயங்கள் தொடர்பாக அதிபருடன் பல தடவைகள் ளுனுஊஃ முடீயு இணைந்து நடத்திய கலந்துரையாடல்களில் மேற்கொண்ட தீர்மானங்கள், ஆலோசனைகள் எதனையும் கருத்தில் கொள்ளாமல் தான்தோன்றிதனமான அதிபரின் செயற்பாடுகளால் மாணவர் கல்வி பாதிக்கப்டுகிறது.

குறிப்பாக உயர்தர மாணவர்களுக்கு சில பாடங்களுக்கு பொருத்தமான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இல்லை. பல பாட வேளைகளில் வகுப்புகள் நடைபெறுவதில்லை. இவ்வாறான காரணங்களாலே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அதிபர் தொடர்பான விடயங்கள் இரு செயலாளர்களாலும் வலயகல்விபணிப்பாளர், செயலாளர் கல்வி அமைச்சு, பிரதிக் கல்விப்பணிப்பாளர் - தேசிய பாடசாலை, கல்வி அமைச்சு என்பவற்றிற்கு நேரிலும், தொலைபேசியிலும், கடிதம் மூலமும் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படாத நிலையிலே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்ட இடத்திற்கு சென்ற அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் போராட்டத்திற்கான காரணங்களை கேட்டறிந்திருந்தார். அதன்பின்னர் போராட்டத்திற்கான காரணம் தொடர்பான மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் இது ஒரு தேசிய பாடசாலை ஆகையினால் மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் தான் இருக்கின்றது. எனவே மத்திய அரசின் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இந்த மகஜரை அனுப்புவதாகவும், அதன் பிரதியை சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு வழங்கி இதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்வதாகவும் அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்திருந்தார்.

இந்த போராட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.






# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனால் காட்டிக் கொடுக்கின்றது.

விமல் வீரவன்ஸவுக்கு எதிராகவும் முறையற்ற விதத்தில் சொத்துச் சேர்த்த குற்ற விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

‘மிஸ்டர் பத்து வீதம்’ என்று அடைமொழி வைத்து ஒரு காலத்தில் அழைக்கப்பட்டவர் பஸில். பின்னர் அந்தப் பத்து வீதமும் பல மடங்காக உயர்ந்து விட்டமை வேறுகதை.

ஆயினும் இது விடயத்தில் அவருக்குச் சற்றும் குறைந்தவர் அல்லர் விமல் வீரவன்ஸ. சாடிக்கு ஏற்ற சரியான மூடி.

இருவருமே ராஜபக்ஷ அரசுகளில் எவ்வாறு சூறையாடினார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

பழைய கூட்டுக்குள் பூட்டு உடைந்து விட்டது. இனி என்ன, ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்கும் வேலை கன கச்சிதமாக அரங்கேறும். அதை விமல் வீரவன்ஸா ஆரம்பித்து வைத்திருக்கிறார். அவ்வளவுதான்...!

+ + +

முல்லைத்தீவில் தனது அலுவலகத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு சட்ட விரோதமான முறையில் அரச காணியை வழங்கிய பிரதேச செயலாளர் ஒருவர் தற்போதைய விசாரணையில் மாட்டியுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் 02 ஆம் வட்டாரம், கோம்பாவில் என்னும் முகவரியில் வசித்து வந்த த.றோகினி என்பவரிற்கு அவரது தந்தையால் சீதனமாக வழங்கப்பட்ட - வருடாந்த அனுமதிப் பத்திரத்தைக் கொண்ட - 02 ஏக்கர் 10 பேர்ச் காணி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு உரிமை மாற்றம் செய்யப்பட்ட அரச உத்தியோகத்தரின் வருட வருமானமானத் தொகை வெறும் 30 ஆயிரம் ரூபா மட்டுமே என அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளமையும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்க முடியாது என்ற விதிமுறையை மீறி இந்தக் காணி அனுமதிப்பத்திரத்தை பிரதேச செயலாளர் வழங்கியுள்ளார்.

அனுமதிப் பத்திரத்தை வழங்கிய பிரதேச செயலாளரின் பிரதேச அலுவலகத்திலேயே காணி அனுமதிப் பத்திரத்தை பெற்றுள்ள உத்தியோகத்தரும் பணியாற்றினார் என்பதும் ஆவண ரீதியில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின் வருட வருமானம் 30 ஆயிரம் ரூபா எனப் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியுள்ள அதே காலத்தில், அந்த அரச உத்தியோகத்தர் மாதம் ஒன்றிற்கு 36 ஆயிரம் ரூபா சம்பளத்தை பெற்றுள்ளார் என்ற அடிப்படையில் அவரின் வருட வருமானம் 4 லட்சம் ரூபாவையும் தாண்டியுள்ளது.

இவை அனைத்தும் தற்போது இடம்பெற்ற விசாரணையில் கண்டுகொள்ளப்பட்டுள்ளன. இந்த விசாரணை அறிக்கை வடக்கு மாகாண காணி ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

# தமிழரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

“2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 84 தடவைகள் அனைத்துக் கட்சிகளும் கூடி ஓர் அரசமைப்பு வரைவைத் தயாரித்தன. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சி முழு மூச்சில் ஈடுபட்டு சமஷ்டி அம்சங்களைக் கொண்ட பல முன்னேற்றகரமான அம்சங்களை உள்ளீடு செய்ய வைத்தது.

ஐந்து ஆண்டு இடைவிட முயற்சியின் பின் இறுதி வரைவில் சம்பந்தன் ஐயா, அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் அதிலுள்ள சிறந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு கையொப்பமிட்டனர். தற்போது ஆட்சியிலிருக்கும் தரப்பும் அதனை ஏற்றுக்கொண்டது. அதனை ஏற்று மேலும் திருத்தங்கள் செய்து புதிய அரசமைப்பைக் கொணரப்போவதாக இந்த அரசு தனது தேர்தல் வாக்குறுதியாக மக்களுக்கு வழங்கியுள்ளது.

இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சி தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. இப்போது இந்த ஐந்து ஆண்டு எமது கட்சியினதும் தலைவர்களினதும் முயற்சியை செல்லாக்காசாக்க அவர் முயற்கின்றார். தவிரவும், எப்போதுமே தமிழர் நன்மைகளை விட தமிழரசுக் கட்சியை மலினப்படுத்துவதையே மேலான செயற்பாடாகக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த முன்னேற்றகரமான அரசமைப்பு வரைவைக் குறை கூறினார். அதற்கு முக்கிய காரணம் தமிழரசின் பங்களிப்புடன் வரும் இந்த ஏற்பாடுகளை எதிர்க்க வேண்டுமே என்பதே அன்றி வேறேதும் இல்லை.

இந்தப் பின்னணியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இப்போது இதனைப் புறந்தள்ளி தான் முன்பு முன்நிலைப்படுத்திய விக்னேஸ்வரன் தலைமையிலான ஆலோசனைகளை முன்தள்ள முற்படுகின்றார். இந்த யோசனைகளை தமிழரசு எப்போதுமே ஏற்றுக்கொண்டதில்லை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இப்போது தமிழரசுக் கட்சிக்குப் பெயர் போய்விடக்கூடாதே என்ற எண்ணத்தில் தன்னை முன்னிலைப்படுத்தும் ஒரு கபடத் திட்டத்துக்குத் தமிழரசுக் கட்சியை உடந்தையாக்கப் பார்க்கின்றார். தமிழரசுக் கட்சியை எப்போதுமே மலினப்படுத்தும் செயற்பாடுகளைச் செய்து வந்தவர் இப்போது அந்தக் கட்சியிலுள்ளதாகக் கருதப்படும் உள்ளக முரண்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் உள்நோக்குடன் கட்சியைப் புறந்தள்ளி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் பேச முற்படுகின்றார்.

இவரது நோக்கம் நல்லெண்ணத்தின் அடிப்படையிலானது அல்ல என்பதை கட்சியிலுள்ள அனைவரும் புரிந்து கொண்டுள்ளனர்.

சென்ற வாரம் அவர் வழங்கிய பேட்டியில் தமிழரசுக் கட்சி தொடர்பிலும் அதன் முக்கியஸ்தர்கள் தொடர்பிலும் கடுமையான வெறுப்பு விமர்சனங்களை முன்வைத்திருந்தார் என்பது யாவரும் அறிந்ததே.

எனவே, தமிழ் மக்களின் நன்மைகளை முன்னிலைப்படுத்தாது தன்னை முன்னிலைப்படுத்துவதும் தமிழரசுக் கட்சியைப் பலவீனப்படுத்துவதற்குமான ஒரு உபாயமாக மட்டுமே அவர் இப்போது முன்னெடுக்கும் இத்தகைய முயற்சி உள்ளது.

அதற்குத் தமிழரசுக் கட்சி இடமளிக்கக்கூடாது. இதனைக் கருத்திற்கொண்டு நாடாளுமன்ற சிறீதரன் மற்றும் கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இவருடன் இது விடயம் தொடர்பில் எதுவித பேச்சுக்களையும் முன்னெடுப்பது தமிழர் நலனுக்கோ கட்சிக்கோ உகந்ததல்ல என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.” - என்றுள்ளது.

---

# தீர்வுத் திட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, குறைந்த பட்சம் அந்த விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி., அதனை முன்னிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோரைக் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதன் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து கஜேந்திரகுமாரிடம் வினவியபோது, எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறவிருக்கும் நிலையில், அன்றைய தினம் சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் மீண்டும் கலந்துரையாடவிருப்பதாகத் தெரிவித்தார்.

அதனூடாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அந்தத் தீர்வுத் திட்ட வரைவு குறித்து ஆழமாக ஆராயவும், கலந்துரையாடவும் முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

---

# மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த ஆலயத்தில் அமைந்துள்ள கேணியைத் துப்புரவாக்கும் பணியில் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர். இதன்போது நீர் இறைக்கும் இயந்திரத்தில் இருந்து மின்கசிவு ஏற்பட்டமையால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

அவர் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி சாவடைந்தார்

சம்பவத்தில் 45 வயதுடைய கார்த்திக் என்ற குடும்பஸ்தரே சாவடைந்தார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# 18 தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மீள நாட்டுக்கு அழைக்கப்பட்டனர்

அரசியல் நியமனம் பெற்ற 18 தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் மீள அழைக்கப்பட்டுள்ளனர் என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைய வெளிநாட்டு சேவையை வினைத்திறன் மிக்க சேவையாக மாற்றும் நோக்கில் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரான மகிந்த சமரசிங்க அந்த பதவியில் தொடர்ந்து பணியாற்றுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் செல்வாக்கு அல்லாத அரச சேவையை உருவாக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பொருள்களைக் கைப்பற்றிய படையினர் இவற்றை உடமையில் வைத்திருந்த மூன்று பேரையும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்கள் மற்றும் சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடத்தி வரப்பட்ட பொருள்கள் தற்போது இலங்கை நாணயத்தில் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.











# வெளிநாட்டு இராஜதந்திரிகளை நியமிக்க கால அவகாசம் தேவை

## வெளிவிவகார அமைச்சு தகவல்




தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை நியமிக்கும் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை நியமிக்கும் நடவடிக்கை தொடர்பான அறிவிப்பை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் பல தூதுவராலயங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நியமனங்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாக பல அலுவலகங்களில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனவும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நியாயமான கால அவகாசம் தேவைப்படும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாட்டின் பல பகுதிகளில் இன்று கடும் மழை



நாட்டின் பல பகுதிகளில் இன்று பலத்த மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தளை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அத்துடன், வடக்கு, வடமத்திய, தெற்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களில் காற்று அதிகரித்து வீசக்கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த பகுதிகளில் காற்றானது மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பீதி கிளப்பும் தொற்று

ஐந்து வருடங்களுக்கு முன்னர் சீனாவில் உருவாகி, உலகெங்கும் பரவி, பூகோளப் பந்தையே பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்திய கொவிட் தொற்றின் பின்னடைவுகளில் இருந்து உலகம் இன்னும் மீளவில்லை. அதன் தாக்கமும் பாதிப்பும் இன்னமும் தொடர்கின்றன. அது ஏற்படுத்திய நெருக்கடிகள் நினைதாலே அச்சம் தருபவை. அது போன்ற பிரச்சினையை உலகம் இன்னொரு தடவை தாங்காது என்பது திண்ணம்.

இந்தப் பின்புலத்தில் சீனாவில் மற்றொரு பெரும் வைரஸ் தொற்றுப் பற்றிய அதிர்ச்சித் தகவல் வெளியாகி இருக்கின்றது.

தற்போது சீனாவில் மனிதர்களை தாக்கும் புதிய வகை வைரசான மெட்டா நியூமோவைரஸ் (எச்.எம்.பி.வி.) வேகமாகப் பரவி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன் விளைவாக சீனாவின் முக்கிய நகரங்களில் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. அங்கு படுக்கைகள் மற்றும் சுடுகாடுகளில் தகன மேடைகள் பழைய படி அதிகரிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான வீடியோக்கள் மற்றும் படங்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக புதிய வைரஸினால் பாதிக்கப்பட்டிருக்கும் சீனாவை வேறு நோய்களும் இலக்கு வைத்திருக்கின்றன.

சீனாவில் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (HMPV) தொற்றுப் பரவலால் மருத்துவமனைகள் நிரம்பி வரும் அதே நேரம் அந்தத் தொற்றுக்கு மேலதிகமாக இன்ப்ளுாயன்சா ஏ, மைக்கோபிளாஸ்மா நிமோனியா மற்றும் கொவிட்-19 போன்ற பல வைரஸ்களும் ஒரே நேரத்தில் பரவி வருவதாக அந்நாட்டு செய்திநிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவில் வடக்கு மாகாணங்களில் அதிக பாதிப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது.

எச்.எம்.பி.வி. என்பது சுவாச தொற்று நோய் வைரஸ் ஆகும். இது மேல் மற்றும் கீழ் சுவாச நோய்த்தொற்றுகளை ஏற்படுத்துகிறது. 2001இல் முதன் முதலாக கண்டறியப்பட்ட இந்த வைரஸ் அனைத்து வயதினருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்தத் தொற்றினால் சுவாச நோய்கள் அதிகரித்து வரும் போதிலும், சீன அரசாங்கமோ அல்லது உலக சுகாதார அமைப்போ அதிகாரபூர்வமாக இன்னும் எந்த எச்சரிக்கையையும் வெளியிடவில்லை. இருப்பினும் சீன அரசு கண்காணிப்பு குழுவை அமைத்து பாதிப்புகளை கண்காணித்து வருகிறது.

இந்த வைரஸ் தொற்றின் அறிகுறிகளும் காய்ச்சல் மற்றும் பிற சுவாச நோய்த்தொற்றுகளின் அறிகுறிகளைப் போலவே இருக்கும். இருமல், காய்ச்சல், நாசி நெரிசல் மற்றும்மூச்சுத்திணறல்ஆகியவைபொதுவான அறிகுறிகளாகும். கடுமையாகும் போது மூச்சுக்குழாய் அழற்சி அல்லது நிமோனியாவுக்கு வழிவகுக்கலாம்.

மற்ற வைரஸ்களைப் போலவே மனித மெட்டாப் நியூமோ வைரஸும் பரவுகிறது. இருமல் மற்றும் தும்மல், கைக்குலுக்குதல் மற்றும் தொடுதல், சுத்தமற்ற பகுதிகளில் கையை வைத்துவிட்டு பின்னர் வாய், மூக்கு அல்லது கண்களைத் தொடுவதன் மூலம் இது பரவுகிறது.

இந்த வைரஸால் குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உடையவர்கள் எளிதாக பாதிக்கப்படுகின்றனர்.

இந்தத் தொற்றைத் தவிர்க்க குறைந்தது 20 விநாடிகள் சோப்பு போட்டு கையைகழுவவேண்டும்.கைக்கழுவாமல் முகத்தைத் தொடக்கூடாது. நோய் அறிகுறி உள்ளவர்களிடம் இருந்து விலகி இருக்க வேண்டும். நாம் அடிக்கடி தொடும் கதவு, கைப்பிடிகள் போன்றவற்றை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும்.

இந்த வைரஸுக்கு சிகிச்சையோ, தடுப்பூசியோ தற்போது வரை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவது எப்போதும் பாதுகாப்பானது.




**கேள்வி : சிலருக்கு உங்கள் மேல் அப்படி என்ன கோபம்? சந்தர்ப்பம் பார்த்து, இல்லாத பொல்லாத குற்றங்களை எல்லாம் சொல்லி உங்களின் காலை வாரத் தயாராக இருக்கிறார்களே! அது ஏன்? டாக்டர் அர்ச்சுனா விடயத்தில் உங்கள் மேல் எத்தனை எத்தனை தூற்றுதல்கள். உங்கள் மனநிலையை இது பாதிக்காதா?**

பதில் : இல்லாத, பொல்லாத தூற்றுதல்கள் என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். அது பற்றி நான் ஏன் கவலைப்படப் போகிறேன்.

கம்பன் கழகம் தொடங்கி நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. இந்த நாற்பத்தைந்து ஆண்டுகளில், இத்தகைய எத்தனையோ அக்கினி ஆறுகளை நான் கடந்து வந்திருக்கிறேன். எனக்கு இதுவொன்றும் புதிய விடயமல்ல.

என்னை, நேசிக்கிறவர்களின் தொகையோடு ஒப்பிடுகையில், என்னைத் தூற்றுகிறவர்களின் தொகை வெறும் புள்ளியளவானதுதான் என்பதை நான் அறிவேன்.

மனதுக்குச் சரியாகப் படுவதை, நான் துணிந்து எழுதியும், பேசியும் வருவதால், பலரையும் அது பாதிக்கிறது. என் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாத அவர்கள், சந்தர்ப்பத்திற்காய் காத்திருந்து, ஒன்றுகூடி என்னை வீழ்த்த முயற்சிக்கிறார்கள். இதற்கெல்லாம் அசைகின்ற ஆள் நானில்லை.

முன்பொருமுறை, செருப்போடு நின்று பொங்கினேன் என்பதற்காக, என்னைத் திட்டோதிட்டென்று திட்டி, நூற்றுக்கணக்கானவர்கள் "கொமன்ஸ்" போட்டார்கள். அவர்களுக்குச் செருப்போடு நின்று நான் பொங்கியதல்ல பிரச்சினை. நான், அவமரியாதைப்பட வேண்டும் என்பதுதான் பிரச்சினை. பல ஆண்டுகளாக விடியற்காலையில் சூரியனைப் பார்த்தறியாத அந்தக் கும்பகர்ணப் புண்ணியாத்துமாக்கள், சூரியனைப் பற்றி அடைந்த கவலைகண்டு நான் ஆச்சரியப்பட்டேன். பாவம்! என் செருப்பால், சூரியனே விழுந்து விடுவான் என்றாற்போல, அவர்கள் கொதித்த கொதிப்பு நகைப்பைத்தான் தந்தது.

இப்போது, அர்ச்சுனா விடயத்தை வைத்துக் கொண்டு மீண்டும் புயல் அடிக்கப் பார்க்கிறார்கள். இவர்கள் அடிக்கும் புயல்கள் எல்லாம், ஆலமரமாய் நிற்கும் எனக்கு வெறும் தென்றற் காற்றுதான். இவர்களால், என்னை அசைக்கக்கூட முடியாது. கல்லெறிபட்ட ஏதோ ஒன்றைப்போல, ஓடியோடி ஓலமிட்டுவிட்டு ஓயவேண்டியதுதான். (அர்ச்சுனா விடயம் பற்றி அடுத்த பதில் எழுதியிருப்பதால், இங்கு அதனை அதிகம் விரிக்க விரும்பவில்லை)

உயரத்தில் ஒளியோடு நிற்கும் சூரியனைக் கண்டு, அவ்வுயரத்தையும், ஒளியையும் எட்டமுடியாத சில பிறவிகள், கொதித்துக் கொந்தளிக்கத்தான் செய்யும். அவற்றின் அந்தச் செயலால், சூரியனது ஒளியும், உயரமும் கடுகளவேனும் குறையப்போவதில்லை என்பது, உலகமறிந்த விடயம்.

எனது ஒழுக்கம் பற்றியும், சமூகச் செயற்பாடுகள் பற்றியும் ஏதேதோ எழுதி, கொச்சைப்படுத்த அவர்கள் முனைகிறார்கள். அவர்களது கற்பனைத் திறன் ஆச்சரியப்பட வைக்கிறது. ஆனால் பாவம், அவர்களின் "பாட்ச்சா" ஏதும் என்னிடம் பலிக்கப்போவதில்லை. இந்தச் சின்னஞ்சிறு பனித்துளிகள், உண்மைச் சூரியனின் வெயில்பட்டு இருக்கும் இடம் தெரியாமற் போய்விடும் என்பது நிச்சயம்.

அவர்களின் தூற்றுதல்களால் என் மனம் சிறிதளவும் வருந்தாது என்பது நிச்சயம். எனக்கிருக்கும் ஒரே கவலை, நம்மக்கள் நல்லவர்களைத் தூற்றுவதும், தீயவர்களை ஏற்றுவதுமாகச் செயற்பட்டு வருவோரைக் கண்டு, இது பிழையென்று கண்டிக்காமல் இருப்பது பற்றித்தான். இதனால் நான் வருத்தமுறுகிறேன். பாவத்தைப் பார்த்திருப்பதும் பாவம்தான் என்பதைக் காலம் உணர்த்துகிறபோது கவலைப்படப் போகிறார்கள்!

காலத்தின் கணக்கெடுப்பில், யார் மிஞ்சுகிறார்கள் என்று பார்ப்போம். இந்த வயதிற்குமேல், தூற்றுதல்களும், போற்றுதல்களும் என்னை எதுவும் செய்யப் போவதில்லை. என் பேச்சும், எழுத்தும் படாத இடங்களிற் பட்டு சிலரைக் "குளறச்" செய்கிறது. அவர்களது "குளறுதல்களில்" என் எழுத்தின் வெற்றி கண்டு மகிழ்கிறேன்.

முகமே தெரியாத பலர் இன்று என் பகைவர்களாகி இருக்கிறார்கள். அதைவிடப் பலமடங்கு அதிகமான முகம்தெரியாதோர், என்னை நேசித்துப் பின்பற்றுகிறார்கள். பிறகென்ன கவலை? சுருங்கச் சொன்னால், "அஞ்சுவதுமில்லை! அஞ்ச வருவதுமில்லை!" அவ்வளவுதான்!

××××××××××××××××××××

**கேள்வி : இம்முறை "சங்கீத கலாநிதி" விருது பெற்ற இசைக் கலைஞர் ரி.எம். கிருஷ்ணா அவர்கள், "மியுசிக்அக்கடமி" கச்சேரியில், லுங்கியும், பூப்போட்ட சட்டையும் அணிந்து கொண்டு வந்து பாடி, புதுமை செய்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அன்றைய அவரது கச்சேரியில், பெருந் தொகையாய் கூடிய மக்கள் கூட்டம் அவரது புதுமைப் புரட்சிக்கு ஆதரவு அளிக்கிறது என்றுதானே அர்த்தம்?**

பதில்: ரி.எம்.கிருஷ்ணாவின் மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். தன்னை மறந்து பாடும் அவரது இயல்பான பாட்டிற்கு நான் அடிமை. இன்றிருக்கும் இசைக் கலைஞர்களில் அவரும் விருது பெறத்தக்க தகுதியுடைய ஒருவர்தான் என்பதில்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲



எவருக்கும் ஐயம் ஏற்பட நியாயம் இல்லை.

இவை போக, அண்மைக்காலமாக கிருஷ்ணா செய்யும் புரட்சிகளில் எனக்கு உடன்பாடில்லை என்பதையும் சொல்லத்தான் வேண்டும். பாட்டு வராதவர்கள் வேண்டுமானால், பரபரப்புக்காக இத்தகைய சில்லறைத் தனமான புரட்சிகளைச் செய்யலாம். தேனாய்ப் பாடுகிற கிருஷ்ணாவுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை என்று தெரியவில்லை.

லுங்கி, பூச்சட்டை போன்றவை புரட்சிக் குறியீடுகளா? என்பது என்னுடைய முதற் கேள்வி. சங்கீதப் புரட்சி என்பது, போடும் சட்டையிலும், கட்டும் லுங்கிகளிலும் தான் இருக்கிறதா? கிருஷ்ணாவின் இந்தச் செயலால், அவரது ரசிகர்களாகிய நாங்கள் நாணப்பட வேண்டியிருக்கிறது. இது வெறும் கேலிக் கூத்து என்பதைவிடச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.

நம்முடைய இறை வழிபாட்டை பெரியவர்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு கூறுகளாய்ப் பிரித்திருக்கிறார்கள். சரியை என்பது, புறத்தில் மட்டும் செய்யப்படும் வழிபாடு. கிரியை என்பது, அகத் தொடர்போடு புறத்தில் செய்யும் வழிபாடு. யோகம் என்பது, புறத்தேவையற்று அகத்தில் மட்டும் செய்யும் வழிபாடு. ஞானம் என்பது, இவ்வழிபாடுகளால் எய்தப்படும் பயன் என்று, தத்துவங்கள் சொல்கின்றன.

இதை நான் ஏன் இப்போது சொல்கிறேன் என்று நினைக்கிறீர்களா? கச்சேரி என்பதும் இறை நோக்கிய ஒரு வழிபாடுதான். அதிலும் மேற்சொன்னதான வழிபாட்டு முறைகள் நான்கும் உள்ளன. புறத்தில் மட்டும் பாடுகிற பாடல், அகத்தோடு தொடர்புபட்டுப் புறத்தில் பாடுகிற பாடல், தனியே அகத்துள் மட்டும் பாடுகிற பாடல், பாடலால் அடையப்படும் பயன் எனும் நான்கும் சங்கீதத்திலும் இருக்கின்றன.

ஆரம்பநிலைப் பாடகர்கள் பாடங்கேட்டதை மட்டும் பாடுவார்கள். அடுத்த நிலைப் பாடகர்கள் அதில் தம் அகக் கற்பனைகளையும் கலந்தும் பாடுவார்கள். மூன்றாம் நிலைப்பாடகர்கள் இறைவனையே சபையாய் நினைந்து, அவனுக்காகத் தம் அகத்தின் உள்ளே மட்டும் பாடுவார்கள். இறுதி நிலைப் பாடகர்கள் தியாகராஜசுவாமிகளைப் போல, தமது இசையால் இறை தரிசனத்தையே பெறுவார்கள்.

மேற் சொன்ன விடயங்களில் சரியையும், கிரியையும் ஆரம்பநிலை வழிபாடுகள் ஆகும். யோகமும், ஞானமும் இறுதி நிலை வழிபாடுகள் ஆகும்.

இறுதி நிலை உற்றவர்களுக்கு, ஆரம்ப நிலையாளர்களுக்குரிய கட்டுப்பாடுகள் ஏதும் தேவையில்லை என்பது என்னவோ உண்மை தான். ஆனால் அவர்கள் ஆரம்ப நிலையாளர்களின் கட்டுப்பாடுகளை நிரகரித்துச் செயற்படமாட்டார்கள். அது அவர்களின் சான்றாண்மையின் அடையாளம்.

கிருஷ்ணா, லுங்கி, பூப்போட்ட சட்டை என்பவற்றைப் போட்டுக் கச்சேரி செய்ததன் மூலம், உயர் நிலையாளர்களுக்கு ஆரம்பநிலையாளரின் கட்டுப்பாடுகள் ஏதும் தேவையில்லை எனும் கருத்தைத்தான் பதிவு செய்ய முயன்றிருக்கிறார். தான் ஆரம்பநிலையைக் கடந்து விட்டபடியால், கச்சேரிக்குரிய கட்டுப்பாடுகள் தன் பாட்டைப் பாதிக்கப்போவதில்லை என்பதையே மேற்படி செயல்கள் மூலம் அவர் உலகிற்குக் காட்டியிருக்கிறார்.

பதில் நீளமாவது தெரிந்தாலும், அவசியம் கருதி இங்கு மற்றொரு விடயத்தையும் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. சைவசித்தாந்தத்தில் “மெய்கண்டதேவர்“ எனும் ஆச்சாரியார் இயற்றிய, “சிவஞானபோதம்“ எனும் நூலே, அதி உயர் நூலாகக் கருதப்படுகிறது. இந்த நூலுக்கு, “சிவஞான மாபாடியம்“ எனும் உரையை “சிவஞானமாமுனிவர்“ என்னும் பேரறிஞர் இயற்றியிருக்கிறார்.

தத்துவக்காரர்கள் “மெய்கண்டதேவரை“ இறைநிலை உற்ற சீவன் முத்தர்களில் ஒருவராகவே கருதுவார்கள். அத்தகு பெரியவர், தனது நூலின் தொடக்கத்தில் ஓர் கடவுள் வாழ்த்தைப் பாடியே நூலைத் தொடங்குகிறார்.

இங்குதான் தத்துவக்காரருக்கு ஓர் ஐயம் உண்டாகிறது. உலகியலில் வாழ்ந்தாலும் இறைநிலை அடைந்துவிட்டு, தனக்கு இடையூறுகள் சிறிதும் வராது என்பதைத் தெரிந்திருந்தாலும், ஏன் இவர் கடவுள் வாழ்த்து இயற்றுகிறார் என்பதுவே அவர்தம் ஐயமாம்.

இக் கேள்விக்கு, உரையாசிரியர் “சிவஞான மாமுனிவர்“ அவர்கள் தனது “மாபாடிய“ நூலில் கீழ்க்கண்டவாறு பதிலுரைக்கிறார்.

ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டும், மாணக்கருக்கு அறிவுறுத்தற் பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய கடவுளை வாழ்த்தினர்.

தனக்குத் தேவையில்லாத போதும், வரும் சந்ததியின் ஒழுக்கமும், உயர்வும் கருதியே “மெய்கண்ட தேவர்“ கடவுள் வாழ்த்தை இயற்றினார் என்பதே அவரது பதிலாக இருக்கிறது. இப்பதிலின் ஆழத்தைக் கிருஷ்ணா உணர்தல் வேண்டும்.

உலகில் எல்லாத் தொழில்களிலும், உடை போன்ற விடயங்களில் ஒரு மரபு பேணும் தன்மை இருந்தேதான் வருகிறது. எதிரியோடு மோத, ஒரு இராணுவ வீரனுக்கு துப்பாக்கியையோ, பீரங்கியையோ பயன்படுத்தத் தெரிந்தால் போதும். ஒரு நர்சுக்கு, ஊசி போடுவதற்கும், மருந்து கொடுப்பதற்கும் தெரிந்தால் போதும், ஒரு பைலட்டிற்கு, விமானத்தை ஓட்டத் தெரிந்தால் போதும். ஒரு மாலுமிக்கு, கப்பலை ஓட்டத் தெரிந்தால் போதும். அப்படியிருக்க இவர்களுக்கெல்லாம் “யூனிபோர்ம்“ என்ற ஒன்றை ஏன் கட்டாயப்படுத்தி வைத்திருக்கிறார்கள்? அது அவரவர் தொழிலுக்குச் செய்யும் மரியாதை. “யூனிபோர்ம்” இல்லாவிட்டால் நாட்டைக் காக்கும் போர் வீரனும், நாட்டை அழிக்கும் தீவிரவாதியும் ஒன்றாய்த்தான் தெரிவார்கள்.

தான் உயர்நிலையை அடைந்து விட்டேன் என்பதற்காக, கிருஷ்ணா இத்தகைய மரபுமீறும் செயல்களைச் செய்தால், அவரை முன் உதாரணமாகக் கொண்டு, “கத்துக்குட்டிகளும்“ வருங்காலத்தில் கிழிந்த சட்டையோடும், இறுகிய “ஜீன்ஸ்“ஓடும், விதம் விதமான முடி வெட்டோடும், பாடத் தொடங்கிவிடுவார்கள். கேட்டால், கிருஷ்ணா செய்கிறார் நாங்கள் செய்தால் என்ன? என்று கேள்வி தொடுப்பார்கள். அதனால் கர்நாட இசைக்குரிய மரியாதை போய்விடும் என்பதைக் கிருஷ்ணா உணர வேண்டும்.

நமது இசைக்கென்று ஒரு மரியாதை இருக்கிறது. அந்த மரியாதைக்கான வடிவமாகத்தான் குறித்த ஓர் உடையைக் கச்சேரிக்கென்று வைத்துக் கொண்டார்கள். அதை மாற்றுவதால் சங்கீதம் ஒன்றும் வளர்ந்துவிடப் போவதில்லை. பின்பு ஏன் கிருஷ்ணாவிற்கு இந்தத் தேவையில்லாத வேலை என்று தெரியவில்லை.

அவருக்கு அன்று கூட்டம் வந்ததற்கான காரணம், பரவியிருக்கும் கிருஷ்ணாவின் புரட்சிச் செயல்கள் தான். அவர் என்ன செய்யப் போகிறார் என்பதைக் காணவும், பலர் அன்று வந்திருக்கலாம். மீன் கரையில் ஏறி நடந்தாலும், மனிதன் ஆகாயத்தில் எழும்பிப் பறந்தாலும், அதனைக்காணக் கூட்டம்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

கூடத்தான் செய்யும். அவர் இன்று சார்பு பட்டு நிற்கும் அணியினர் வேறு, கூட்டம் கூட்டுவதில் வல்லவர்கள் என்பது உலகறிந்த விடயம். அதனால் கூடுகிற அந் தக் கூட்டத்தை, நீங்கள் ஒன்றும் பெரிதாய்க் கருதி மயங்காதீர்கள்.

××××××××××

**கேள்வி : அண்ணாமலையின் சவுக்கடி சம்பவத்தை இரசித்தீர்களா?**

பதில் : எனக்கென்னவோ, அவரது நிலைக்கு இது சற்று மிகைச் செயலாகவே தோன்றுகிறது. தமிழ்நாட்டு வாக்காளர்களை இப்படித்தான் ஈர்க்கலாம் என்று முடிவுசெய்துவிட்டார் போல. தன்னிலைக்கு மக்களை உயர்த்துவதுதான் ஒரு நல்ல தலைவனுக் குரிய அடையாளம். மக்கள் நிலைக்கு அவர் இறங்கி வருவதை என்னால் ரசிக்க முடியவில்லை.

××××××××××

**கேள்வி : சென்றமுறை, "வரும் உள்ளூ ராட்சித் தேர்தலில்" யாழ்ப்பாணத்தில் யார் வெல்லப் போகிறார்கள்? என்ப தையும், யார் மேயராய் வரப்போகிறார்கள் என்பதையும் ஊகியுங்கள் பார்க்கலாம்" என்ற கேள்விக்கு நீங்கள் அளித்திருந்த, "இன்றைய நிலை தொடருமானால், டாக்டர் அர்ச்சுனா நிறுத்தப் போகும் அணி வென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அடுத்து மேயர் யார் என்றா கேட்கிறீர்கள்? அதில் என்ன சந்தேகம்? இவர்களது அணி வென்றால், மேயராகப் போவது தங்கமான தங்கம்தான்" என்றும், பதில் அளித்தி ருந்தீர்கள். "யூடியூப் சனல்" ஒன்றில் "தமிழடியான்" எனும் புனைப் பெயரைக் கொண்டவர், கௌசல்யாவை நீங்கள் தங்கமான தங்கம் என்று சொன்னதைக் கடுமையாக விமர்சித்திருக்கிறாரே கேட்டீர்களா?**

பதில் : பார்த்தேன். அவர் அர்ச்சுனாவின் "மீளா அடிமை". அர்ச்சுனாவிற்காகவே பெரும்பாலும் அந்த "யூடியுப் சனலை" அவர் நடாத்தி வருகிறார். இன்று சுலபமாக விற்பனையாகக்கூடிய பொருளை விற்கத் தெரிந்த புத்திசாலி. அர்ச்சுனாவின் செயல்களுக்கு ஒளிபாய்ச்சுவதைத் தனது முழுநேர வேலையாய் கொண்டிருக்கிறார். அர்ச்சுனாவின் ஓர் உண்மைத் தொண்டனாக அவர் செய்து வரும் அந்த மிகைப் பணியை நான் தவறென்று சொல்ல மாட்டேன்.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவர் கதாநாயகன். சிலருக்கு இராமனைப் பிடிக்கும். சிலருக்கு இராவணனைப் பிடிக்கும். சரி, பிழை ஒருபக்கம் கிடக்க, எனக்குப் பிடித்தவரைத்தான் எல்லோருக்கும் பிடிக்கவேண்டும் என்று உரைப்பது மாபெரும் தவறு!

ஒன்று மட்டும் நிச்சயம். எங்களது பாரம்பரியக் கட்சிகளுக்கு, "தமிழடியானைப்" போன்ற ஓர் உண்மைத் தொண்டன் இல்லாமல் இருப்பது, அல்லது அர்ச்சுனாவைப் போல இப்படி ஒரு தொண்டரை உருவாக்கத் தெரியாமல் இருப்பது, கவலைக்குரிய விடயமேயாம்.

உடனுக்குடனாய் அர்ச்சுனா பற்றிய செய்தி களைப் போற்றி வெளியிடுவதையும், அவர்பற்றி யாரேனும் ஏதேனும் சொன்னால், அவர்களைத் தூற் றித் தள்ளுவதையும், தனது தலைப்பணியாய் ஏற்றுக் கொண்டிருக்கிற தமிழடியான், சரியோ? பிழையோ? அப்பணியைத் திறம்படச் செய்து வருகிறார் என்பது மட்டும் உண்மை.

அவரது என்னைப்பற்றிய விமர்சனம் பற்றிச் சில விடயங்களை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவற்றைக் கீழே வரிசைப்படுத்துகிறேன்

- "தமிழடியான்" அந்தப் பதிலில், என்னைத் தூற்றி யதைவிடப் போற்றியது தான் அதிகம் என்பேன். "இந்தப் படித்தமனிதர் உலகமறிந்தவர், பெரிய மனிதர் இப்படியெல்லாம் பேசலாமா?" என்று பலதரமாய், அப்பதிவில் அவர் கேள்வி எழுப்பி யிருக்கிறார். இது தூற்றுதலா? போற்றுதலா? என்று நீங்களே சொல்லுங்கள்!
- மிகக் கேவலமாக விமர்சித்து, என்னை மௌனிக்கச் செய்யலாம் என நினைப்போர் மத்தியில், எனது தரம் குறைகிறதே என்று வருத்தப்பட்டிருக்கும் "தமிழடியானுக்கு" எனது நன்றிகள்.
- அப்பதிலில், நான் அர்ச்சுனா அணிவென்றால், அடுத்த மேயர் "தங்கமான தங்கம்" என்றுதான் சொல்லியிருக்கிறேன். வாதத்திற்கு வேண்டுமா னால், "தங்கமான தங்கம்" என்று நான் சொன்னது கௌசல்யாவை அல்ல என்று சொல்லி அவரது வாயை அடைக்க முடியும். ஆனால் அப்படிப் பொய்மை பேச நான் விரும்பவில்லை.
- போகிற வருகிற இடங்களிலெல்லாம் கௌசல் யாவை "தங்கம், தங்கமென்று" சொல்லிச் சொல்லி நாடாளுமன்றத்திற்குள் இருந்துகூட, டாக்டர் அர்ச்சுனா அவர்கள்தான் கௌசல்யாவிற்கு அந்தப் பெயரை நிலைக்கச் செய்து இருக்கிறார்.
- இந்த இடத்தில், "தமிழடியானுக்கு" ஒன்றை அழுத் திச் சொல்ல விரும்புகிறேன். நான் சொன்னதைக் கேட்டு, இவ்வளவு கோபிக்கிற "தமிழடியான்", தனது தலைவனுக்கு, இருவர் உறவுக்கிடையில் சொல்லப்படுகிற செல்லப்பெயரை (அது சகோ தரமாயினும், காதலராயினும், நண்பர்களாயி னும்) பொது இடங்களில் பாவிப்பது அநாகரீகம் என்று, ஒருதரமேனும் ஏன் சொல்லவில்லை?
- ஒரு தலைவராய் ஆன பின்பும், இப்படிப் பொது வெளியில் விளையாட்டுப் பிள்ளையாய் அவர் "தங்கம், தங்கம்" என்று பேசுவது தவறென்று, ஒரு நடுநிலை ஊடகவியலாளராய் ஒருதரமேனும் "தமிழடியான்" அர்ச்சுனாவைக் கண்டித்திருக்க வேண்டும். அதைவிடுத்து, அவரது தலைவரே தங்கமென்ற பட்டப்பெயரைப் பொது இடங்க ளில் வழங்க, பார்த்து இரசித்துவிட்டு, இப்போது கோபிப்பதில் நியாயம் இருப்பதாகப் படவில்லை.
- என் பதிலில், கௌசல்யாவை நான் "தங்கமான தங்கம்" என்று உயர்த்தித்தான் சொல்லியிருக்கி றேன். தங்கமான தகரமென்றோ, தங்கமான பித்தளையென்றோ, இழிவுபடுத்திப் பேசவில்லை.
- தங்கமான தங்கம் என்று நான் உரைத்ததில், ஒரு கிண்டல் தொனியிருந்த உண்மையை நான் மறுக்கவும் விரும்பவில்லை. இன்னும் சமூக வாழ்விற்குள் நேரடியாக வராமல் இருக்கும் கௌசல்யாவை, நான் கிண்டலாக விமர்சித்தது தவறோ? என்று, தமிழடியான் கேள்வி எழுப்பிய பிறகு எண்ணத் தோன்றுகிறது. அதனால், ஏதே னும் சங்கடம் ஏற்பட்டிருந்தால், சகோதரி கௌசல்யா என்னை மன்னிப்பாராக!

தமிழடியானின் விமர்சனங்களுக்கு அஞ்சியோ, அல்லது அவரது, உரையை வைத்து என்னைக் கடுமையாக விமர்சித்து வருகிறவர்களுக்கு அஞ்சியோ, எவரையேனும் சந்தோஷப்படுத்த நினைந்தோ, இவற்றை நான் எழுதவில்லை.

அப்படி எழுத எக்காலத்திலும் எனக்கு வராது என்பது நிச்சயம். எல்லோரின் தவறுகளையும் கண்டிக் கிற நான், என்னில் தவறு கண்டாலும், அதையே செய்ய வேண்டும் என்ற நினைப்பினாலேயே இப்ப திலை எழுதியிருக்கிறேன்.

அதேநேரத்தில் மற்றொன்றையும் அழுத்திச் சொல்லித்தான் இப்பதிலை நிறைவுபடுத்த விரும்பு கிறேன். எனக்கென்னவோ அர்ச்சுனா செல்லும் பாதை சரியானதாய்ப் படவில்லை. அவர் சில சரியான விடயங்களைப் பல பிழையான வழிகளினூடு செய்து கொண்டிருக்கிறார்.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

எல்லோரையும் அலட்சியம் செய்து நடக்கும் அவரது போக்கு நிச்சயம் என்றோ ஒருநாள் அவருக்குத் தீங்கு விளைவிக்கப்போகிறது என்று எனது உள்மனம் சொல்கிறது. ஏற்பதும் ஏற்காமல் விடுவதும் அவர் இஷ்டம்.

××××××××××



**கேள்வி : தமிழகத்தில் அண்ணாமலை யாரின் "சவுக்கடி" பற்றி என்ன நினைக் கிறீர்கள்?**

பதில்: இரங்கி (இறங்கி) வேலை செய்யத் தொடங்கி விட்டதன் அடையாளமாய்த் தெரிகிறது.

××××××××××



**கேள்வி : மாணவர்களுக்கான, விஜய் கட்சி யின் ஆறுதற் கடிதத்தை வழங்கவிடா மல் தடுத்த தமிழக அரசின் செயல்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : அநாவசியமான செயல். தடுமாற்றம் தெரிகிறது.

# இடமாற்றம் வழங்கியும் அந்தப் பாடசாலைக்கு செல்லாத ஆசிரியர்களுக்கு என்ன நடவடிக்கை?

## வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கேள்வி



(கி.வசந்தன்)

இடமாற்றம் வழங்கியும் குறித்த பாடசாலைக்கு செல்லாத ஆசிரியர்களுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது என வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா தெற்கு வலய ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர் இடம்மாற்றம் தொடர்பாக பேசப்பட்டது. செட்டிகுளத்திற்கும், நகரப் பாடசாலைகளுக்கும் இடையில் பெரியளவில் வித்தியாசம் இல்லை. இருக்கின்ற ஆசிரியர்களை பகிர்ந்து வழங்கியுள்ளோம்.

இடமாற்றம் என்பது இடமாற்ற சபை ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. தனியாக அதிகாரியோ அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரோ அதனை மேற்கொள்ளவில்லை. தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இடமாற்ற சபையில் இடமாற்றம் செய்யப்படும். மேன் முறையீட்டு சபையிலும் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அதனை செயற்படுத்தாத ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை இல்லை.

அவர்கள் போகாது விட்டால் வலயக் கல்விப் பணிப்பாளரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதற்கு என்ன தீர்வு என்று சொன்னால் செய்ய முடியும். அந்த தீர்வை வரையறுத்து தந்தால் நாம் நடவடிக்கை எடுப்போம். - எனத் தெரிவித்தார்.

# பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காணி கனகராயன்குளம் பகுதியில் விரைவில் விடுவிப்பு

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தகவல்



(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு, கனகராயன் குளம் பகுதியில் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காணி ஒன்றை விடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான காணி ஒன்று 2009 ஆண்டுக்கு பின் பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்தக் காணியை விடுவிக்க அப் பகுதி மக்கள் பல தடவைகள் முயன்றும் அது பயனளிக்கவில்லை. இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து வவுனியா மாவட்ட செயலக அபிவிருத்திக் குழுக்க கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதையடுத்து வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடனும், பிரதி பொலிஸ்மா அதிபருடனும் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியிருந்தோம்.

இதனையடுத்து அக்காணியை உடனடியாக விடுவிக்க வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். இதனால் இக் காணி உடனடியாக விடுவிக்கப்படுகிறது. - என அவர் மேலும் தெரிவித்தார்.




# மன்னார் காற்றாலை கட்டுமானம், கனிய மணல் அகழ்வு; தற்காலிகமாக நிறுத்த ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்திக் கட்டிமானம் மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவை உடனடியாக தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டும் என மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவு பற்றிய அறிவிப்பை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க விடுத்துள்ளார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மன்னார் ரயில் போக்குவரத்து சேவைகள், திண்மக் கழிவு அகற்றுதலில் உள்ள சிக்கல்கள், காற்றாலை மின்சார திட்டம், மற்றும் கனியவள மண் அகழ்வு போன்ற பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதன் போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது. இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த காற்றாலைத் திட்டத்தை விளக்குவதற்கு அத்திட்டத்தின் முகாமையாளர் முயன்ற போது கிராம மட்ட பிரதிநிதிகள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் போது காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் பிரதேச மக்கள் விரும்பாத ஒரு செயற்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது என்றார்

எனவே இந்த திட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்த காற்றாலை திட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் இந்த நடவடிக்கை தொடருமாயின் மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிடும். எனவே அதை நிறுத்துவது சிறந்தது. மேலும் எதிர் வருகின்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இந்த விடயங்கள் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் ஏற்பாட்டில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாட் பதியுதீன், துரை ராசா ரவிகரன். மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன் ஆகியோருடன் சகல திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மட்ட பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகத் தலைவர்கள், மதத் தலைவர் கலந்து கொண்டனர்.

மேலும் மன்னார் நகர சபையினால் அகழ்வு செய்யப்படுகின்ற மனித மற்றும் திண்மக்கழிவுகள் பாப்பாமோட்டை இல் உள்ள நிலையத்தில் சேகரிக்கப்பட்டு வந்த நிலையில், அந்த நடவடிக்கைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை காரணமாக நீண்ட காலமாக மன்னார் நகர சபையினால் உரிய முறையில் கழிவு அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்ட போதிலும் தற்போது மனித கழிவுகள் அகற்றப்பட்டு குறித்த நிலையத்தில் சேகரிக்க நீதி மன்றத்தினால் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் திண்ம கழிவுகளை அகழ்வு செய்கின்ற போதும் அதை கொட்டுவதற்கு உரிய இடம் இல்லை என மன்னார் நகர சபையின் செயலாளரினால் மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தகவல் முன் வைக்கப்பட்டது.














# உலக பிரெய்லி தினம் இன்று

உலகளவில் இலட்சக்கணக்கான கண்பார்வையற்றவர்களுக்கு பிரெய்லி எழுத்து முறைதான் ஞானப்பார்வையாக இருந்து வருகிறது என்று சொன்னால் நம்பிதான் ஆக வேண்டும்.

நவீனமயமாகி கொண்டே இந்த உலகத்தில் மனிதன் எவ்வளவு வளர்ந்திருந்தாலும் சில இயற்கையின் படைப்புக்கள் மற்றும் நடைமுறைகளை நம்மால் மாற்றியமைக்க முடியாது. உதாரணமாக இரவு - பகல் மாறி மாறி வருவது இதற்கு சிறந்த உதாரணம் எனலாம்.

நமது வாழ்வில் நாம் இந்த மாற்றங்களைக் காண முடிந்தாலும் சிலரது வாழ்வு எப்போதும் இருளால் மட்டும் நிறைந்த உலகமாகவே காணப்படுகின்றது. பார்வையை இழந்தோரது வாழ்வில் வெளிச்சம் என்ற ஒன்றை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது.

இவ்வாறு பார்வையற்றோரது வாழ்வில் விடியலாய் வந்தவரே லூயி பிரெய்லி ஆவார். அதாவது கண் பார்வை இழந்தோருக்கு தன்னம்பிக்கையூட்டும் வகையிலும், உலகம் முழுவதும் உள்ள கண் பார்வை குறைபாடு உள்ளவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த புது எழுத்துருவைக் கண்டுப்பிடித்த லூயிஸ் பிரெய்லி (Louis Braille) பிறந்த தினமான ஜனவரி 4 ஆம் திகதியன்று பிரெய்லி தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

1809 இல் பிறந்த லூயிஸ் பிரெய்லி, பிறவியிலேயே பார்வையற்றவர் அல்லர். குழந்தை பிராயத்தில் அவர் எதிர்கொண்ட விபரீத விளையாட்டு, அடுத்தடுத்து இரு கண்களின் பார்வையையும் பறித்தது. அதாவது பிரான்ஸில் 1809ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி குடும்பத்தில் நான்காவது பிள்ளையாக லூயி பிரெய்ல் பிறந்தார். லூயியின் தந்தை ஒரு தோல் வியாபாரி. தோல்களை வெட்டி தனது கைப்பணியால் கைப்பைகள், பணப்பைகள், காலணிகள் போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்வதே தொழிலாகக் கொண்டிருந்தார். சிறு வயது முதலே லூயி சுட்டித்தனமாகவும் அனைத்தையும் பயிலுவதில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். பிரெய்லுக்கு மூன்று வயது நிரம்பியிருந்தது. ஒரு சமயம் தந்தை வீட்டில் இல்லாத சமயம் தந்தையின் ஊசியை எடுத்து தோலில் தைத்து பழகி விளையாடிக் கொண்டிருந்த வேளை கண்ணில் ஊசி குற்றி விட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற போதிலும் அந்த ஒரு கண்ணின் பார்வையை இழந்தார். சில காலங்கள் கழித்து முதல் கண்ணில் ஏற்பட்ட பாதிப்பின் விளைவினால் மற்றைய கண்ணின் பார்வையையும் இழந்தார் லூயிஸ் பிரெய்லி.



நாகராசா தனுஸ்காந்
(ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

முழுமையான பார்வைத் திறனுடன் பிறந்தவர், திடீரென பார்வையை இழந்த தன் வேதனையை அவர் உணர்ந்தார். இதனால் மீண்டும் பார்வையை மீளப்பெற வேண்டும் அல்லது அதற்கு இணையான வாய்ப்புகளை பெற வேண்டும் என்பதில் இளம் வயது முதலே தீரா ஆர்வம் கொண்டிருந்தார். பார்வையற்றோருக்கான பள்ளியில் லூயிஸ் சேர்க்கப்பட்டு பார்வை போனதைப் பற்றி வருந்தாமல் துறு, துறு சிறுவனாகவே இருந்தார். பள்ளியில் கரும்பலகையும் புத்தகத்தையும் பார்க்க முடியவில்லை என்றாலும் ஆசிரியர் நடத்துவதைக் கூர்ந்து கேட்டு சிறந்த மாணவராக வலம் வந்தார். தொடக்கக் கல்வியை முடித்தபின் பார்வையற்றோர் பள்ளியில் சேர்ந்தார். மேற்படிப்பைத் தொடரும் போதுதான் பல்வேறு விஷயங்களை அறிந்து கொள்ள சிரமம் இருப்பதாகத் தோன்றியது. அந்நேரத்தில் பிரெஞ்சு இராணுவத்தில் 'Night Writing' என்ற இரவு நேர எழுத்து என்ற முறையை அறிமுகம் செய்தனர். 12 புள்ளிகளை அடையாளமாகக் கொண்டு இராணுவ வீரர்கள் விடயத்தைப் புரிந்து கொள்வார்கள்.

விளக்கமாகச் சொல்வதானால் இராணுவ போர் முனையில் உள்ள சிப்பாய்களுக்கு வழக்கமான முறையில் தகவல் அனுப்பினால் இரவு நேரங்களில் அதைப் படிக்க விளக்கு நெருப்பைப் பயன்படுத்த வேண்டியதிருக்கும். அது எதிரிப் படைகள் கண்டுப்பிடிக்க எளிதான இலக்காக்கி கொண்டிருந்தது. இதைத் தவிர்க்கத்தான் இந்த 'Night Writing' முறையை சார்ல்ஸ பார்பியர் என்ற பிரெஞ்ச் கேப்டன் உருவாக்கியிருந்தார். 12 புள்ளிகளை அடிப்படையா வைத்து உருவாக்கப்பட்ட அந்த முறையில், காகிதத்தின் புள்ளிகள் மேலெழுந்து மேடு மாதிரி ஒரு அமைப்பை கொண்டிருக்கும். குறிப்பிட்ட வரிசையில் புள்ளிகள் இருந்தால் அது ஒரு எழுத்தையோ எண்ணையோ குறிக்கும். அதே போல் எல்லா எழுத்து மற்றும் எண்ணுக்கும் புள்ளி

தொடர்ச்சி▼

# உலக பிரெய்லி தினம் இன்று

தொடர்ச்சி▲


களை வைத்து குறியீடு உருவாக்கியிருப்பார்கள். இதை விரலால் தொட்டுப் பார்த்து, என்ன தகவல் சொல்லியிருக்கார்கள் என்பதை இரவு நேரங்களில் விளக்கு வெளிச்சம் இல்லாமல் போர் முனையில் உள்ளோரால் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த முறை சிரமமாக இருந்ததால் எல்லோராலும் படிக்க முடியவில்லை. எனவே பிரெஞ்சிராணுவம் இந்த முறையைக் கைவிட்டது. இதை அடுத்து இந்த முறை பார்வையற்றோர் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அங்கும் இதேபோல சிரமங்கள் ஏற்பட்டன.

இதனால் மாற்றுத்திறனாளிகள் கடும் இன்னலுக்கு ஆளானார்கள். ஆனால் மேற்படி இராணுவ முறையில் வாசிப்பதும், எழுதுவதும் தனக்கு இயல்பாக கூடி வந்ததை அறிந்து ஆனந்தம் அடைந்தார் பிரெய்லி. இதை தன் சக பார்வையற்ற சக மாணவர்களுக்கு அந்த எழுத்துக்கள் மற்றும் வாசிப்பு குறித்து பிரெய்லி எடுத்துச் சொன்னபோது அவருக்கு வயது 15.

மேலும் தீவிர ஆராய்ச்சி மற்றும் கடுமையான உழைப்பின் பயனால், உலகின் முதல் பார்வையற்றோர் எழுத்துக்களை உருவாக்கினார். எப்படி என்றால் 12 புள்ளிகள் கொண்ட Night Writing முறையை அடிப்படையாகக் கொண்டு, 6 புள்ளிகள் மட்டும் வைத்து 63 விதமான சேர்க்கையில் எழுத்துக்கள் மற்றும் எண்களை உருவாக்கினார். இந்த முயற்சிகளை அவர் 1824 மேற்கொண்டு, 1829 இல் திருப்தி அடைந்து தன் இந்தப் புதிய முறையை உலகத்துக்கு அறிமுகப்படுத்தினார் பிரெய்லி, இடைப்பட்ட காலத்தில் அவர் படித்த பள்ளியிலேயே வரலாறு, கணக்கில் அல்ஜீப்ரா மற்றும் ஜியோமெட்ரி வகுப்புகளும் எடுக்கத் தொடங்கி விட்டார்.

பிரெய்லிக்கு படிப்பு மட்டுமில்லாமல் இசையிலும் ஏகப்பட்ட ஆர்வம் இருந்தது. சிறு வயதிலேயே செல்லோ மற்றும் ஆர்கன் ஆகிய இரண்டு இசைக்கருவிகளை நன்றாக வாசிக்கக் கற்றுக் கொண்டார். 1834 ஒல் இருந்து 1839 வரை பல கிறிஸ்தவ தேவாலயங்களில் இந்த இசைக் கருவிகளை அவர் வாசித்து உள்ளார், இசை மேல் ஆர்வம் இருந்ததால் அவர் உருவாக்கிய பிரெய்லி முறையை இசைக்கும், கணிதப் பாடங்களுக்கும் உருவாக்கினார் என்று கூட சொல்லலாம். ஆக பிரெய்லி 20 வயதில் அவரது கண்டுபிடிப்பு பிரான்ஸில் பார்வையற்றோர் மத்தியில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. தடித்த புள்ளிகளை விரலால் தொட்டுத் துலங்குவதன் மூலம், பல்வேறு பாடங்களையும் கற்க பிரெய்லி எழுத்துக்கள் உதவ ஆரம்பித்தன.

ஆனால் பார்வைத் திறன் சவால் உடையவர்களுக்கான ஒரு கற்றல் முறையை பிரெய்லி உருவாக்கினாலும், தொடக்கத்தில் அது சரியான வரவேற்பைப் பெறவில்லை என்பது நிஜம். அவர் படித்த Royal Institute for Blind Youth பள்ளியிலேயே அவர் உருவாக்கிய முறைக்கு சரியான வரவேற்பு கிடைக்கவில்லை. இதற்கிடையில் 1852 இல் பிரெய்லி காலமானார். பிரெய்லிக்கு சிறு வயதில் இருந்தே சுவாசக் கோளாறு ஏற்பட்டு கிட்டத்தட்ட 16 வருடங்கள் அந்த நோயினால் அவதிப்பட்டு வந்தார். 1852 இல் அது மிக தீவிர பாதிப்புக்குள்ளாக்கியதால் ராயல் இன்ஸ்ட்டிட்யூட் Royal Institute மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு காலமாகினார். அவர் இறந்த பிறகுதான் பிரெய்லி முறை கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்குத் தெரிய வந்தது. 19 ஆம் நூற்றாண்டில் பிரெய்லி முறை உலகமெங்கும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். புத்தகங்களோடு மட்டும் இல்லாமல், பிரெய்லி டைப்ரைட்டர், பிரெய்லி கீபோர்டு என பார்வைத்திறன் சவால் உடைய




வர்கள் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கு பிரெய்லி முறை மிகவும் வசதியாவும் எளிமையாகவும் ஆகி விட்டது.

இரண்டு நூற்றாண்டுகள் கடந்து இன்றைக்கு ஊயடநனெநச, யுவுஆ, டீழழமள சாதாரண மக்கள் பயன்படுத்தும் அதே வசதிகளை யாரோட உதவியும் இல்லாம பார்வைத் திறன் சவால் உடையவர்களும் பயன்படுத்த முடிகிறது. அதற்கு பிரெய்லி கண்டறிந்த அந்தக் கற்றல் முறை முக்கியக் காரணம். இடையில் காப்பிரைட் பிரச்சினைகளால் பிரான்ஸில் லூயிஸ் பிரெய்லி உருவாக்கிய பிரெய்லி எழுத்து முறைகள் உலகமெங்கும் பரவுவதில் தடைகள் எழுந்தன. தன்னார்வ அமைப்புகளின் உதவியால், அந்த தடைகள் உடைக்கப்பட்டதில் பிரான்ஸுக்கு அப்பாலும் பிரெய்லி புரட்சி பரவியது. இன்று தமிழ் உட்பட உலகின் பெரும்பாலான மொழிகளில் பிரெய்லி மூலம் அறிவுக் கண்கள் மலர்ந்த பார்வையற்றோர் அதிகம். சென்னை அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் மட்டும் சுமார் 2500 பிரெய்லி நூல்கள் உள்ளன.

பின்னாளில் பிரெய்லியோட சாதனையை போற்றும் விதமாக 1952 இல் பிரெய்லி பிறந்த ஊரில் புதைக்கப்பட்டிருந்த அவரோட உடலை பிரான்ஸ் அரசு எடுத்து வந்து பாரிஸில் உள்ள பேன்தியான்னில் (Pantheon) முழு அரசு மரியாதையோடு மறுபடியும் அடக்கம் செய்தது. பிரான்ஸில் மிகவும் மரியாதைக்குரியவர்களை அங்கு அடக்கம் செய்வார்கள் என்பதால் பிரெய்லிக்கு அந்த மரியாதையை வழங்கி பெருமிதப்பட்டுக் கொண்டது.

இவ்வாறான உலக அளவில் இலட்சக்கணக்கான பார்வையாளர்களின் பார்வை புலத்திற்கு உயிர் கொடுத்த லூயிஸ் பிரெய்லிக்கு நன்றி செலுத்தும் முகமாகவே லூயிஸ் பிரெய்லி பிறந்த தினத்தைத்தான் நன்றியோடு உலக பிரெய்லி தினமாக பார்வையற்றோர் கொண்டாடுகிறார்கள். பிரெய்லி எழுத்துக்கும் அப்பால், பார்வையற்றோர் குறித்த விழிப்புணர்வுக்காகவும், இடையூறுகளை கடப்பதற்கு உதவியாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.



# அண்ணா பல்கலை. விவகாரத்தில் முதல்வர் மன்னிப்புக் கேட்கும் வரை விடமாட்டோம்

## குஷ்பு தெரிவிப்பு

"தமிழகத்தில் அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. அண்ணா பல்கலைக்கழக சம்பவத்துக்கு முதல்வர் நேரடியாக மன்னிப்பு கேட்கும் வரை விடாமல் போராடுவோம்."

– இவ்வாறு பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் மாணவி துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து தமிழக பா.ஜ.க. மகளிரணி சார்பில் மதுரை முதல் சென்னை வரை நீதி யாத்திரை நடைபெறும் என பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை அறிவித்தார். இந்த யாத்திரைக்கு போலிஸார் அனுமதி வழங்கவில்லை. இருப்பினும் தடையை மீறி யாத்திரை நடைபெறும் என பா.ஜ.க. சார்பில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மதுரை சிம்மக்கல் செல்லத்தம்மன் கோயில் அருகே நேற்று பா.ஜ.க. மகளிரணியினர் கூடினர். பா.ஜ.க. மாநில மகளிரணித் தலைவர் உமாரவி தலைமையில் யாத்திரையை பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு தொடங்கி வைத்தார். அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"பா.ஜ.க. மகளிரணி கூட்டத்தை பார்த்து தி.மு.கவினர் பயந்து போய் வீட்டில் முடங்கியுள்ளனர். இக்கூட்டம் தி.மு.கவினரைப் போல் பணம் கொடுத்தோ, பிரியாணி கொடுத்தோ கூட்டப்பட்டது அல்ல. நீதிக்காக போராட வந்த கூட்டம்.

பெண் குழந்தைகள் வைத்துள்ளவர்கள் அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நிகழ்ந்த வன்கொடுமையால் தெருவுக்கு வந்துள்ளனர். விளம்பரத்துக்காக பா.ஜ.க. போராடுவதாக தி.மு.கவினர் கூறுகின்றனர். பா.ஜ.வுக்கு விளம்பரம் தேட வேண்டிய அவசியம் இல்லை. உலகின் சிறப்பாக ஆட்சி செய்யும் கட்சி பா.ஜ.க. சிறந்த தலைவர் மோடி என்பது அனைவருக்கும் தெரியும். தி.மு.கவுக்கு தான் விளம்பரம் தேவை.

ஒவ்வொரு இடத்திலும் கையில் பேப்பர் வைத்துப் படிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், பெண்களை பாதுகாப்பது இப்படித்தானா? தேர்தலுக்கு முன்பு பெண்கள் பாதுகாப்பு தொடர்பாக பல விஷயங்களை சொன்னீர்கள். நேற்று கூட பெண்களுக்கு புதிய திட்டத்தை கொண்டு வந்துள்ளார். பெண்களை காப்பாற்ற வக்கில்லாமல், புதிய திட்டங்களை கொண்டு வந்து என்ன பயன்? பெண்களை முதலில் காப்பாற்றுங்கள்.

பெண்களை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளுங்கள். பெண்களுக்கு சுயமரியாதை சொல்லிக்கொடுத்தவர் கருணாநிதி. அவர் குடும்பத்தில் இருந்து வந்தவரா நீங்கள்? உங்கள் வீட்டிலும் பெண்கள் இருக்கிறார்கள். கூட்டத்துக்கு போனால் போதும், கையில் பேப்பர் வைத்துப் படித்தால் போதும் என இருக்கிறீர்கள். அனைத்தும் பொய், பித்தலாட்டம். நான்கு ஆண்டுகளில் ஒன்றும் செய்யவில்லை. எதற்கெடுத்தாலும் மத்திய அரசு மீது பழிபோடுகிறார். மத்திய அரசின் நிதி எவ்வளவு வந்துள்ளது என்பது தமிழக மக்களுக்கு தெரியும்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமை நடந்தால் ஒரு முதல்வர் என்ன செய்ய வேண்டும். கட்சிக்கு அப்பாற்பட்டு முதல்வர் என்ற முறையில் என் மண்ணில், கண்ணகி பிறந்த தமிழ்நாட்டில் பெண்ணுக்கு ஒரு பிரச்சினை வந்தால் ஒரு சகோதரனாக துணை நிற்பேன் என சொல்லிருக்க வேண்டும். அதை செய்யாமல் பார்த்தும் பார்க்காதது போல் கடந்து செல்கிறார்.

அண்ணா பல்கலைக்கழக சம்பவத்தில் பொலிஸார், ஒரு சார் சொன்னதால் ஞானசேகரனை விட்டோம் எனக் கூறியுள்ளனர். யார் அந்த சார். இந்தக் காலத்தில் செல்போன் மூலம் எதையும் கண்டுபிடித்துவிட முடியும். அந்த சார் யார் எனக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளனர். பொலிஸாருக்கு அதிகாரம் இல்லையா?

தமிழகத்தில் ஒவ்வொரு இடத்திலும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வரை, முதல்வர் பாதிக்கப்பட்ட பெண்ணிடம், ஒவ்வொரு தாய்மார்களிடம் மன்னிப்பு கேட்கும் வரை, இனிமேல் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நடக்காது என உறுதியளிக்கும் வரை நாங்கள் சும்மாயிருக்க மாட்டோம். எங்களுக்கு நீதி, நியாயம் வேண்டும். இது தமிழ் மண் மீதும், கண்ணகி மீதும், ஒவ்வொரு தமிழ் பெண்கள் மீதும் சத்தியம்.

இந்தப் போராட்டம் வெறும் ஆரம்பம் தான். இது அப்படியே சென்றுகொண்டு இருக்கும். ஒவ்வொரு விஷயத்திலும் சும்மாயிருக்க மாட்டோம். கைது செய்தாலும், வீட்டு காவலில் வைத்தாலும் போராடுவோம். தெருவுக்கு வருவோம். அதில் உறுதியாக இருக்கிறோம். பா.ஜ.கவின் குரல் தமிழகத்தில் ஒவ்வொரு தெருவுக்கும், வீடுகளுக்கும் செல்ல வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் பாதுகாப்பு கிடைக்கும் வரை போராட்டம் நடைபெறும்."– என்றார்.




# டில்லியின் பனிமூட்டம் காரணமாக விமான, ரயில் சேவைகள் பாதிப்பு

டில்லி மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் உட்பட வட இந்தியாவின் பல பகுதிகளில் நேற்று கடுமையான குளிர் அலை ஏற்பட்டது

இந்த பகுதிகளை மூடிய கடுமையான பனிநிலைமையால் ரயில் மற்றும் விமான செயற்பாடுகளும் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டன.

விமான கண்காணிப்பு இணைய தளமான ஃப்ளைட்ராடரின் கூற்றுப்படி,

டில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் குறைந்தது 60 புறப்படும் விமானங்கள் தாமதமாகின எனவும் ஆறு விமானங்கள் இரத்து செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், 193 விமானங்களின் வருகை தாமதமானதுடன் நான்கு விமானங்களின் வருகை இரத்து செய்யப்பட்டுள்ளன.

கொல்கத்தா விமான நிலையத்தில், புறப்படும் 17 விமானங்கள் தாமதமா கின. ஒன்று இரத்து செய்யப்பட்டது. 36 வரும் விமானங்களும் தாமத மாகின.

நேற்று வெள்ளிக்கிழமை காலை டில்லி விமான நிலையத்தில் ஓடுபாதைத் தெரிவுநிலை பூஜ்ஜியமாக இருந்தது, மேலும் விமான நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படக்கூடும் என்று விமான நிலைய அதிகாரிகள் எச்சரித்தனர்.

அதேநேரம், பனிமூட்டம் காரண மாக நீண்ட தூர சேவைகள் உட்பட குறைந்தது 24 ரயில்கள் தாமதமாக இயக்கப்படுகின்றன என இந்திய ரயில்வே தெரிவித்துள்ளது.

இதேவேளை பனிமூட்ட நிலைமை யால் பஞ்சாப் மாநிலம் பதிண்டாவில் தனியார் பஸ்ஸொன்று விபத்துக் குள்ளானது.

இதில் 20 முதல் 25 பயணிகள் காயம் அடைந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.





# மத்தியதரைக் கடலில் படகு விபத்து 27 பேர் உயிரிழப்பு; 87 பேர் மீட்பு!

மத்தியதரைக் கடலை கடக்க முயன்ற இரண்டு படகுகள் துனிசியாவின் ஸ்ஃபாக்ஸ் நகருக்கருகில் மூழ்கியதில், 27 ஆபிரிக்க குடியேற்றவாசிகள் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

துனிசியாவின் கடலோர காவல்படை மேற்கொண்ட மீட்புப் பணியில், 27 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், 87 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பாவை நோக்கிப் பயணித்த இந்த குடியேற்றவாசிகள், ஆபத்தான கடல் வழிகளை அடிக்கடி பயன்படுத்துகின்றனர்.

கடந்த மாதமும் இதேபோன்ற ஒரு சம்பவம் பதிவாகியிருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# கட்டடமொன்றில் மோதிய விமானம் இருவர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

அமெரிக்கா – கலிபோர்னியாவில் சிறிய ரக விமானம் ஒன்று நேற்று வர்த்தக கட்டடமொன்றில் மோதியதில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் 18 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒற்றை இயந்திரம் கொண்ட ஆர்.வி.-10 ரக சிறிய விமானம் ஒன்றே விபத்திற்குள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# சீனாவில் பரவும் புதிய வைரஸ்!



சீனாவில் மீண்டும் புதிய வகை வைரஸ் பரவி வரும் நிலையில், அந்நாட்டு மக்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

HMPV (Human Metapneumo Virus) என்ற புதிய வைரஸால் சுவாச நோய் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட்-19 தொற்றின் அறிகுறிகளைப் போலவே இந்த நோயின் அறிகுறிகளும் இருக்கின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் சீனாவிலிருந்து பரவிய கொவிட் -19 வைரஸ் உலக நாடுகளைப் பெரிதும் பாதித்திருந்தது.

இந்நிலையில் சீனாவில் மீண்டும் புதிய வைரஸ் பரவி மக்களைப் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

குறிப்பாக 14 வயதுக்குட்பட்டவர்கள் அதிகளவில் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு மற்றும் மூச்சுத்திணறல் ஆகியவை இதன் அறிகுறிகள் என்று சொல்லப்படுகிறது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் சீனாவின் பல மருத்துவமனைகளில் நிரம்பியுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 04.01.2025

## மேஷம்

உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந்தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

## ரிஷபம்

இன்று அவநம்பிக்கையும் அமைதியின்மையும் காணப்படும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் அதிகம் சாதிக்கலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொண்டு நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

## மிதுனம்

இன்று மிதமான பலன்களே காணப்படும். இன்று செயல்கள் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். சில பணிகள் நிலுவையில் நிற்கும். இன்றைய சவால்களை சந்திக்க சமநிலை போக்கு தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நீங்கள் வருத்தமான மனநிலையில் இருப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு எழும். இதனால் முரண்பாடு எழும். இருவரும் பரஸ்பரம் பேசிக் கொள்வதன் மூலம் தீர்வு காணலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் தாயாருக்கு சிறிய உடல் நலக் கோளாறு காணப்படும்.

## கடகம்

இன்று இனிமையான நாள். உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணிகளை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கி யிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## சிம்மம்

இன்று துடிப்பான நாளாக இருக்காது. இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். கவனம் மற்றும் சிறப்பான திட்டம் நல்ல பலன் தரும்.

நீங்கள் உங்கள் துணையுடன் விஷயங்களை தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது நிலையான உறவிற்கு நல்லதல்ல. எந்த விஷயத்தையும் லேசாக சாதரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. இன்று கணிசமான தொகை சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைவு.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மற்றும் யோகா மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் ஏற்படும்.

## கன்னி

இன்று சுமூகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் திட்டமிட்டு கடினமாக உழைக்க வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் சக பணியாளர்களின் வளர்ச்சி காரணமாக நீங்கள் பாதுகாப்பற்ற தன்மை உணர்வீர்கள். அவர்கள் பணியில் முன் நிலையில் இருப்பார்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது வன்மையாக நடந்து கொள்வீர்கள். பதட்டமில்லாத நல்லுறவை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலையில் ஏற்ற இறக்கம் காணப்படாது. பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டியது அவசியம்.

## துலாம்

இன்று சகஜமாகவும் நகைச்சுவை போக்கும் மேற்கொண்டால் நன்மை ஏற்படும். பிரச்சினைகளை சமாளிக்க இயலும். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக ஆற்றலாம். அதன் மூலம் வெற்றி காணலாம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு கவனமற்ற வார்த்தைகளை பேச வாய்ப்புள்ளது. இது உறவில் மகிழ்ச்சியைக் கெடுக்கும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

கண் மற்றும் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.

## விருச்சிகம்

இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.01.2025




இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபகரமாக இருக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்காக உற்சாகத்துடன் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் அவர் உங்கள் உறவின் மதிப்பை உணரலாம்.

இன்று போதிய அளவு நிதி காணப்படும். உங்கள் பணத் தேவைகள் இன்று பூர்த்தியடைய அது உதவும். நீங்கள் அதிக அளவில் பணம் சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது சில சமயங்களில் நீங்கள் பொறுமையின்றி காணப்படுவீர்கள். நீங்கள் தைரியம் இழக்கும் வகையில் கடினமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

நீங்கள் அற்ப விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இது உங்கள் உறவில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். இன்று செரிமானம் சம்பந்தமாக பிரச்சினை காணப்படும்.




இன்றைய நாள் சிறந்த பலன் தர சாதகமாக அமையாது. நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியது அவசியம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பரபரப்பான பணிச்சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க தவறுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

இன்று உங்கள் வங்கியில் கணிசமான தொகை பராமரிக்க இயலாது. செலவுகள் காரணமாக கையிருப்பு பணம் கரையும்.

இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். இதனால் பதட்டம் ஏற்பட்டு ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று வாய்ப்புகளும் அதிர்ஷ்டமும் நிறைந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்துக் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் உயர்ந்த நிலை அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட உதவும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனால் உங்களிடம் திருப்தி காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த சட்டமூலம் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்படவில்லையெனின் அதனை இந்த மாதத்திலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையை இடையூறு ஏற்படாத வகையில் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

திறைசேரியூடாக உரிய வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் 2023 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் புதிய வாக்காளர்களுக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்ய அண்மையில் கூடிய அமைச்சரவையில் தீர்மானம் எட்டப்பட்டது.